2013 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

178—

சொந்தக் கட்டடம்

***21355—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட, குத்தாலம் வட்டம், குத்தாலம் கிராமம், புல எண் 181–ல், மொத்தப் பரப்பளவான 0.54.0 ஹெக்டேரில், 0.22.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில மாற்றம் செய்வதற்காக நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது. நில மாற்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன், கட்டடம் கட்டுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதியின் துணைகொண்டு காவேரியின் உரிமையைப் பெற்றுத் தந்த காவேரித் தாய், பொன்னியின் செல்வி மாண்புமிகு அம்மா*

அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது பூம்புகார் தொகுதியில் உள்ள குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே உள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அரசு நிலம் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், "அம்மா திட்டம்" என்கின்ற அற்புதமான திட்டத்தை வருவாய்த் துறையின்மூலமாக அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்திட்டத்தின் வாயிலாக, வருவாய்த் துறை அதிகாரிகள் மக்களுடைய இல்லத்திற்கே சென்று, குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிவர்த்தி செய்து, மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிற இந்த வேளையிலே, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டிக் கொடுக்கும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

பள்ளி தரம் உயர்த்துதல்

***23956—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, வேங்கடத்தானூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,